மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : நம்முடைய அரசு சார்பாக $3\frac{1}{2}$ கோடி ரூபாய்க்குத் திட்டம் போட்டு அனுப்பினோம். மத்திய அரசாங்கத்திலிருந்து $1\frac{1}{2}$ கோடி ரூபாய்க்குள் திட்டம் போட்டு அனுப்புமாறு தெரிவித்திருக்கிறார்கள். அந்த $1\frac{1}{2}$ கோடி ரூபாய்க்கு. இப்போது திட்டம் போடப்பட்டிருக்கிறது.

திரு. ஆ. கு. சுப்பையா : இந்தத் திட்டத்தின்படி பாலங்கள் கட்டுவது, சாலைகள் போடுவது என்று மதிப்பீடு செய்த பிறகு பாலங்களைக் கட்ட வேண்டாமென்று மாநில அரசோ மத்திய அரசோ சம்பந்தப்பட்ட இலாகாக்களுக்கு உத்தரவு கொடுத்திருக்கிறார்களா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஏற்கனவே குறிப்பிட்டது போல் நம்முடைய அரசின் மூலமாக $1\frac{1}{2}$ கோடி ரூபாய்க்கு 122 இணைப்புச் சாலைகளையும், 9 அங்காடிகளையும் இணைக்கும் வகையில் திட்டமிட்டு மத்திய அரசுக்கு அனுப்பிற்று. மத்திய அரசு $1\frac{1}{2}$ கோடி ரூபாய்க்கு மட்டுமே திட்டமிட வேண்டுமென்று குறிப்பிட்டதன் காரணமாகச் சில திட்டங்களைக் கைவிட நேரிட்டது.

தேசிய நெடுஞ்சாலைகள்

*587 வினா—திரு. பி. எஸ். மணியன் : மாண்புமிகு பொதுப்பணித் உற்பத்தி செய்யும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ? Highways) இரு மருங்கிலும் நிழல் தரும் மரங்களை துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை—கன்னியாகுமரி தேசிய நெடுஞ்சாலையின் National

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : நெடுஞ்சாலைகள், தேசிய நெடுஞ்சாலைகள் இருமருங்கிலும் நிழல் தரும் மரங்களை நடும்

அவசியத்தைக் கருதி அரசுக்கு செயற்குறிப்பு அனுப்பும்படி அரசு தலைமைப் பொறியாளர்களைக் கேட்டுக் கொண்டிருக்கிறது.

திரு. பி. எஸ். மணியன் : இத்தகைய நெடுஞ்சாலையில் தற்போது திருச்சியிலிருந்து மதுரைக்கு திண்டுக்கல் வழியாக இருக்கும் தூரம் 100 மைல்; திருச்சியிலிருந்து மேலூர் வழியாக மதுரைக்கு இருக்கும் தூரம் 85 மைல். 15 மைல் தூரம் குறைவாக இருக்கின்ற மேலூர் சாலையைச் செப்பனிட்டு தேசிய நெடுஞ்சாலையாக ஆக்க அரசு ஆவன செய்யுமா ?

1972 மார்ச் 20]

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : தேசிய நெடுஞ் சாலைகளாக ஆக்கும் பொறுப்பு மத்திய அரசாங்கத்தைச் சேர்ந்தது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்து மத்திய அரசாங்கத் திற்குத் தெரிவிக்கப்படும். அவர்கள் ஒப்புக்கொண்டால் தேசிய நெடுஞ்சாலையாக ஆக்கப்படும்.

ஓடம்போக்கி ஆற்றின் குறுக்கேயுள்ள பாலம்.

*588 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா—

திருவாரூர்–விஜயபுரத்தில் உள்ள "ஓடம் போக்கி" ஆற்றின் குறுக்கேயுள்ள பாலத்தினை அகலப்படுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இல்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, தற்போது திரு வாரூரில் மிக அதிகமான போக்குவரத்து ஏற்பட்டிருக்கும் காரணத் தால் இனிமேலாவது அந்த "ஓடம்போக்கி" ஆற்றின் குறுக்கே யுள்ள பாலத்தை அகலப்படுத்தி அமைக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : மாண்புமிகு உறுப் பினர் சொல்லுகின்ற அந்த இடத்தில் அப்ரோச் ரோடு 20 அடி அகலந்தான் இருக்கிறது. மேற்கொண்டு அகலப்படுத்த சாத்தியம் இல்லை. இரு மருங்கிலும் கட்டடங்கள் இருக்கின்றன. அந்தக் கட்டடங்களை அப்புறப்படுத்த வேண்டும். ஆகவே, தற்போது அந்தப் பாலத்தை விரிவுபடுத்தும் திட்டம் கிடையாது.

கோவை மாவட்ட கூட்டுறவு மத்திய வங்கித் தலைவர்

*566 வினா—திரு. கே. என். குமாரசாமி : மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோவை மாவட்ட கூட்டுறவு மத்திய வங்கிக்கு தலைவர் நியமிக் கப்படாமல் இருப்பது உண்மையா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : இல்லை.

Tapioca Package Scheme at Killiyoor

*290 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—